# திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2023-12-17

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்* 61: 1-2*ய*, 10-11,

*லூக்* 1: 47-48. 49-50. 53-54,

*திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்* 5: 16-24,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 1: 6-8,19-28 )

*திருப்பலி முன்னுரை*

*மகிழ்ச்சிக்குரியவர்களே, திருவருகை காலத்தின் மூன்றாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம். இன்றைய நாளை நம் தாய் திருச்சபை மகிழ்ச்சி ஞாயிறாக சிறப்பிக்கிறது. ஒளியாம் இறைவனின் வருகைக்காக இஸ்ரயேல் மக்களைத் தயார் செய்த திருமுழுக்கு யோவானின் குரலுக்கு செவிகொடுக்க நாம் அழைக்கப்படுகிறோம். ஆண்டவரின் முன்னோடியாக வந்த யோவானின் தாழ்ச்சி நிறைந்த மனநிலையுடன் வாழ பழகிக் கொள்வோம். ஆண்டவரின் வருகை நம் வாழ்வில் மகிழ்ச்சியையும், மனநிறைவையும் கொணர, இந்த திருப்பலியில் உருக்கமாக மன்றாடுவோம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*மகிழ்ச்சியின் மன்னரே இறைவா,*

*எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உமக்கு பணி செய்வதில் மகிழ்ந்திருக்கவும், உமது நற்செய்தியின் மகிழ்ச்சியை உலகோருக்கு பகிரவும் வரம் அருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*அக்களிப்பு தருபவரே இறைவா,*

*பகை, வன்முறை, தீவிரவாதம், போர் போன்றவற்றால் அமைதியின்றி தவிக்கும் இவ்வுலக மக்களை, உமது அன்பால் ஒன்றிணைத்து, அக்களிப்பின் தைலத்தால் திருநிலைப்படுத்துமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*மனமாற்றம் அளிப்பவரே இறைவா,*

*தீமைக்குரிய இருளின் பாதையில் நடக்கும் அனைவரும், ஒளியாகிய உம்மை கண்டுகொள்ளவும், அதன் வழியாக உடல், உள்ள, ஆன்ம நலன்களை பெற்று மகிழவும் உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*அகமகிழ்வின் ஊற்றே இறைவா,*

*உம் திருமகனின் வருகைக்காக காத்திருக்கும் எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவர் மீதும் உமது அருளை பொழிந்து, மகிழ்ச்சியும், மனநிறைவும் அளிக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.*